# மாகாணக்கல்வித் திணைக்களம்

# வடக்கு மாகாணம்

## நிலையறி பரீட்சை - 2021


தரம் 05 | கணிதம் | நேரம் -1.30 மணித்தியாலம்

### பகுதி– 01

**01) சரியானவிடையின் கீழ்க்கோடிடுக.**

1) 58342 என்னும் எண்ணில் இலக்கம் 3 இனால் வகைக்குறிக்கப்படும் பெறுமானம் யாது?

1.300 2.100 3.30

2) 


வட்டத்தில் உள்ளஎல்லா இலக்கங்களையும் பயன்படுத்தி உருவாக்கக்கூடிய மிகச் சிறிய எண் யாது?

1.01679 2.10697 3.10679

3) புகையிரத நிலையமொன்றில் திங்கட்கிழமை 5687 பேர் பிரவேசித்தனர். அத்தினத்தில் 3249 பேர் வெளியேறினர். பிரவேசித்தோர் தொகை வெளியேறியோர் தொகையை விட எவ்வளவு கூடுதலானது?

1.8936 2.2438 3.2448

4) 20 தேங்காய்களில் ¾ பங்கில் உள்ள தேங்காய்கள் எத்தனை?

1.15 2.5 3.10

5) பி.ப 10.15 மணியானது இருபத்துநான்கு மணி நேரக் கடிகாரத்தில் காட்டப்படும் விதம்.

1.10:15 2.22:15h 3.22:15

6) ஒரு மாணவனுக்கு 4 அப்பியாசப்புத்தகங்கள் வீதம் பகிர்ந்தளிப்பதற்காக ஒரு பாடசாலைக்கு 804 அப்பியாசப்புத்தகங்கள் தேவைப்பட்டன எனின், எத்தனை மாணவர்கள் அப்பாடசாலையில் உள்ளனர்?

1.21 2.201 3.3216

7) பயணியொருவர் 23km 400m தூரப் பயணத்தினை 17km 700m இனைப் புகையிரதத்திலும் மீதித்தூரத்தை பஸ் வண்டியிலும் சென்றார். அவர் பஸ் வண்டியில் சென்ற தூரம் எவ்வளவு?

1.6km 700m 2.5km 700m 3.41km 100m

8) நாணயத்தாள்களில் கையொப்பமிட்டுள்ளோரின் பதவிகள் எவை?

1.மத்திய வங்கி ஆளுநர், நிதிஅமைச்சர்

2.மத்திய வங்கி ஆளுநர், கல்விஅமைச்சர்

3.மக்கள் வங்கி முகாமையாளர், நிதிஅமைச்சர்


kalvi.lk

9) 2l 500ml இல் எத்தனை 250 மில்லிலீற்றர்கள் உண்டு?

1.12 2.5 3.10

10) 1kg 300g நிறையுள்ள ஒரு பூசணிக்காயை 3 துண்டுகளாக வெட்டிய போது இரு துண்டுகளின் நிறை 460g, 520g ஆகும். எஞ்சிய துண்டின் நிறை யாது?

1.980g 2.320g 3.480g

11)  இவ் வடிவங்களைப் பயன்படுத்தி உருவாக்கக் கூடிய திண்ம உரு எது?

1.கோளம் 2.கூம்பகம் 3.உருளை

12) நாதன் பிற்பகல் 5.15 மணிதொடக்கம் பிற்பகல் 7.00 மணிவரை பாடம் படித்தான். அவன் பாடம் படித்த நேரம் எவ்வளவு?

1.1மணித்தியாலம் 45 நிமிடங்கள்.

2.2மணித்தியாலம் 15 நிமிடங்கள்.

3.1மணித்தியாலம் 15 நிமிடங்கள்.

13) ஒருபெட்டியில் 7 தீக்குச்சிகள் வீதம் 126 பெட்டிகளில் உள்ள தீக்குச்சிகள் எத்தனை?

1.18 2.745 3.882

Education கல்வி

14) உருவில் நிழற்றப்படாத பகுதியை தசம எண்ணாக எழுதினால் 

1.0.2 2.0.8 3.0.5

15) ஒரு பப்பாசிப்பழத்தின் நிறை 1kg 450g ஆகும். மற்றொரு பப்பாசிப்பழத்தின் நிறை 1kg 600g ஆகும். இரண்டு பப்பாசிப்பழங்களினதும் மொத்த நிறை யாது?

1.150g 2.2kg 1050g 3.3kg 50g

16) 39,999 இலும் 2 கூடியஎண் யாது?

1.40,002 2.39,997 3.40,001

17) ஆயிரத்தினிடத்து இலக்கம் 3 ஆகவும் நூறினிடத்து இலக்கம் 7 ஆகவும் பத்தினிடத்து இலக்கம் 4 ஆகவும் ஒன்றினிடத்து இலக்கம் 9 ஆகவும் உள்ள எண் யாது?

1.3794 2.3749 3.9473

18) ஒருசாடியில் நான்கு நாற்றுக்கள் வீதம் 69 சாடிகளில் நடக்கூடிய நாற்றுக்களின் மொத்த எண்ணிக்கை யாது?

1.276 2.268 3.17

19) ஒரு பென்சிலின் விலை ரூபாய் 8.50 எனின் 7 பென்சில்களின் விலை யாது?

1.ரூபாய் 59.50 2.ரூபாய் 56.00 3.ரூபாய் 89.00

20) 6 விளிம்புகளும் 4 உச்சிகளையும் உடைய திண்ம உரு எது?

1.கனவுரு 2.நான்முகி 3.கூம்பகம்